தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்சி-23.
ந.க.எண்.1/உ_1/2020 நாள் 22.09.22

பொருள்: தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) திருச்சி-23 – நவம்பர் 2022 தேர்வுக் கட்டணம் செலுத்துதல் – விவரங்கள் தெரிவித்தல் - தொடர்பாக.

------------

**நவம்பர் 2022**-ல் நடைபெறவுள்ள மூன்று மற்றும் ஐந்தாம் பருவத்திற்கான இளநிலை மற்றும் முதுநிலை மூன்றாம் பருவத் தேர்வுக்கான பதிவுப் பட்டியல் (Exam Registration Galley) துறைகளுக்கு வழங்கப்படுகிறது. Covid-19 தொற்றுச் சூழலைக் கருத்தில் கொண்டு அரசின் பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) பின்பற்றி மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு மாணவர்கள் இணையவழியாக(Online) Net banking / ATM அட்டை மூலம் பணம் செலுத்தி பதிவு செய்யும் முறை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாணவர்கள் தவிர்க்க இயலாத சூழலில் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் நேரடியாக பணம் செலுத்தி பதிவு செய்யும் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்களது தேர்வுக்குரிய கட்டணத்தை Net banking / Debit card (ATM card) மூலமாக தாங்கள் இருக்கும் இடத்திலேயே இணைப்பு – I ல் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி **26.09.2022** முதல் உரிய காலத்தில் கட்டணத்தைச் செலுத்தி தேர்வுக்கு தவறாமல் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் நேரடியாக பணம்செலுத்தி பதிவு செய்யும் முறையை தவிர்க்க இயலாத சூழலில் மட்டும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாணவர்கள் நடப்பு பருவ பாடங்கள் அனைத்திற்கும் (Current Semester Subject) கடந்த பருவங்களில் உள்ள தாட்களுக்கு அகமதிப்பெண் மேம்படுத்துவதற்கும் (CIA Improvement) கட்டாயம் தேர்வுக் கட்டணம் செலுத்திட வேண்டும்.

**<u>தேர்வுக் கட்டண விவரம்</u>** :

| | ரு. |
|---|---|
| 1) பதிவுக் கட்டணம் | - 50/- |
| 2) இளநிலை பட்ட வகுப்பு எழுத்துத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு | - 75/- |
| 3) இளநிலை பட்ட வகுப்பு செய்முறைத் தேர்வு ஒன்றுக்கு | |
| 3 மணி நேரம் தேர்வுக்கு | - 100/- |
| 6 மணி நேரம் தேர்வுக்கு | - 200/- |
| 4) இளநிலை பட்ட வகுப்பு திட்ட அறிக்கை | - 200/- |
| 5) முதுநிலை பட்ட வகுப்பு எழுத்துத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு | - 150/- |
| 6) (1) முதுநிலை பட்ட வகுப்பு செய்முறைத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு | |
| 3 மணி நேரம் தேர்வுக்கு | - 200/- |
| 4 மணி நேரம் தேர்வுக்கு | - 250/- |
| 6 மணி நேரம் தேர்வுக்கு | - 350/- |
| (2) முதுநிலை கணினி அறிவியல் செய்முறைத் தேர்வுத் தாள் ஒன்றுக்கு | - 300/- |
| 7) முதுநிலை பட்டவகுப்பு திட்ட அறிக்கை ( Project work) | - 400/- |
| 8) மதிப்பெண் பட்டியலுக்கானக் கட்டணம் (அனைவருக்கும் பொதுவானது) | - 100/- |
| 9) நிலுவைத்தாள் மதிப்பெண் பட்டியல் அனுப்ப பதிவுஅஞ்சல் | |

கட்டணம் (Arrear students only) - 100/-

10) அபராத கட்டணம் - 300/-

11) அகமறுமதிப்பீட்டு கட்டணம் - தாள் ஒன்றுக்கு
**(Internal Updation)** - **100/-**

**நடப்புப் பருவத் தேர்வுக்குரிய கட்டணம் செலுத்தாமல், நிலுவைத் தாள்களுக்கு மட்டும் கட்டணம் செலுத்தக் கூடாது. முதலாமாண்டு இளநிலை / முதுநிலை பட்டவகுப்பு மாணவ மாணவியர்கள் கட்டாயம் தத்தமது முதல் பருவத் தேர்வுக் கட்டணத்தைச் செலுத்தியிருக்க வேண்டும். நடப்புப் பருவத் தாள்களுக்கான தேர்வுக் கட்டணத்தை செலுத்தத் தவறினால், தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் அந்தக் கட்டணத்தை ரூ.500/- அபராதத்தோடு அடுத்து வரும் பருவத்தில் செலுத்துவதோடு அந்தத் தாள்களுக்கான நிலுவைத்தாள் கட்டணத்தையும் (Arrear Exam fees) செலுத்த நேரிடும் என அறிவிக்கலாகிறது.**

அபராதமின்றி தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய காலம்: **26.09.22 முதல் 08.10.22 வரை**
**(இணையவழியாக அல்லது நேரடியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்தில்)**

அபராதம் **ரூ.300/-** உடன் தேர்வுக் கட்டணம்
செலுத்த வேண்டிய காலம்: : **09.10.22 முதல் 14.10.22 வரை**
**(இணையவழியாக மட்டும்)**

தட்கல் முறையில் கட்டணம் ரூ.**600**/- உடன் தேர்வுக்கட்டணம்
செலுத்த வேண்டிய காலம் **(இணையவழியாக மட்டும்)**: **15.10.22 முதல் 19.10.22 வரை**

**தேர்வுக்கட்டணம் செலுத்தியிருந்தாலும், இரசீதின் நகலினைப் பொறுப்பாசிரியரிடம் ஒப்படைத்து தேர்வு பதிவு பட்டியலில் இரசீது எண் (Order No.) குறிப்பிட்டு பொறுப்பாசிரியர் கையொப்பம் இட்டிருந்தால் மட்டுமே மாணவர்கள் தேர்வுக்கு பதிவு செய்ததாக கருதப்பட்டு தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.**

## தட்கல் முறையில் பதிவு செய்தல்

**தேர்வுக்கான பதிவினை அபராதம் செலுத்தி மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளான 14.10.2022 வரை தேர்விற்கான பதிவு செய்ய தவறிய மாணவர்கள் தட்கல் பதிவுமுறையில் கட்டணம் செலுத்தலாம். இம்முறையில் உரிய கட்டணங்களுடன் தட்கல் (Thatkal) கட்டணமாக ரூ.600/-யும் செலுத்தி 15.10.2022 முதல் 19.10.2022 வரை தேர்வுக்கான பதிவினை இணையவழியாக மட்டுமே மேற்கொண்டிட மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

**குறிப்பு** : வகுப்புப் பொறுப்பாசிரியர்கள் (**Tutor-in-charge**) தத்தம் மாணவர்களுக்கு தேர்வுக் கட்டண விவரத்தை முழுமையாக தெரிவித்து உரிய காலத்திற்குள் கட்டணத்தை இணையவழியாகவோ அல்லது நேரடியாகவோ செலுத்தி பதிவு மேற்கொள்ள அறிவுறுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

துறைத்தலைவர்கள் அந்தந்த வகுப்புப் பொறுப்பாசிரியர் (Tutor-in-Charge) உதவியுடன் மேற்கண்ட தேர்வு பதிவுப் பட்டியலில் உள்ள பதிவுகளைச் சரிபார்த்து, பணம் செலுத்திய அனைத்து மாணவர்களுக்கும் இரசீது எண் தேதியுடன் குறிப்பிட்டுள்ளததைச் சரிபார்த்து, பொறுப்பாசிரியர் மற்றும்

துறைத்தலைவா் முத்திரையுடன் கூடிய கையொப்பமிட்டு **20.10.2022**-க்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் சமா்ப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## SINGLE WINDOW INSTANT REGISTRATION
## (ஒற்றைச்சாளர உடனடிப் பதிவு முறை)

தட்கல் முறையிலும் கட்டணம் செலுத்தத் தவறும் மாணவர்கள் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தேர்வுக்கு பதிவு செய்திட ஒற்றைச்சாளர உடனடிப் பதிவுமுறை **(Single Window Instant Registration)** இந்த பருவம் முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த முறையில், தட்கல் பதிவுக்கான காலம் நிறைவு பெற்ற பின்னர் கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு தேர்வு நெறியாளர் அலுவலக முன் அனுமதி பெற்று ரூ.1200/- ஒற்றைச்சாளர உடனடிப் பதிவுக் கட்டணத்துடன் பிற கட்டணத்தையும் சேர்த்து தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் நேரடியாக மட்டுமே செலுத்தி தேர்வுக்குப் பதிவு மேற்கொள்ளலாம். இம்முறையில் இணையவழியாக பதிவு மேற்கொள்ள இயலாது..

நிபந்தனைகள் :

1. நடப்பு பருவங்களில் கல்லூரியில் பயின்றுவரும் மாணவர்கள் **(Current Students)** மட்டுமே இம்முறையில் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவர்.
2. படிப்பு காலம் முடித்து கல்லூரியைவிட்டுச் சென்ற **(Outgone)** மாணவர்கள் இப்பதிவுமுறையைப் பயன்படுத்த அனுமதி கிடையாது.
3. இம்முறையில் பதிவு செய்ய, தேர்வு நெறியாளரிடம் முன் அனுமதி பெற்ற பின்னரே கட்டணத்தை நேரடியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் செலுத்த அனுமதிக்கப்படுவர்.
4. பிற கட்டணங்களுடன் ரூ.1200/- உடனடி பதிவுக் கட்டணமாக சேர்த்து செலுத்த வேண்டும்.

நவம்பர் 2022 பருவத்தாளுக்குரிய ஒற்றைச்சாளர உடனடிப் பதிவுமுறை

| | | |
|---|---|---|
| துவங்கும் நாள் | : | 21.10.2022 |
| கடைசி நாள் | : | 29.10.2022 |

### கட்டண விலக்கு

மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்களது மாற்றுத்திறனாளிக்கான சான்றிதழை இணைத்து பொறுப்பு ஆசிரியர் மற்றும் துறைத் தலைவர் வழியாக முறையாக விண்ணப்பித்தால் நடப்பு பருவ தாட்களுக்கு மட்டும் கட்டண விலக்களிக்கப்படும்.

படிப்புக் காலம் முடித்து நிலுவைத் தாட்கள் **(Arrear Papers)** உள்ள மாணவ மாணவியர்கள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் நேரடியாக விண்ணப்பம் பெற்று, பூர்த்தி செய்த விண்ணப்பத்தை உரிய தேர்வுக் கட்டணத்துடன் பல்கலைக்கழகத்தால் மாற்றம் செய்யப்பட்டுள்ள தொகுப்பு மதிப்பெண் பட்டியல்

மற்றும் தற்காலிகச் சான்றிதழுக்கான நிலுவைத்தொகையின் கட்டண விவரத்தையும் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொண்டு தேர்வுக் கட்டணத்தை செலுத்தி உரிய ரசீதுடன் பொறுப்பாசிரியர் மற்றும் துறைத் தலைவர் கையொப்பம் பெற்று **20.10.2022**-க்குள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

தேர்வு நெறியாளர். முதல்வர்.

இணைப்பு :

(1) இணையவழி கட்டணம் செலுத்தும் முறை

(2) தேர்வுக் கட்டணம் செலுத்தும் நாள் பட்டியல்.

பெறுநர்:

1. அறிவிப்பு பலகை (2)
2. அனைத்து துறைத் தலைவர்கள். (மாணவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டு)
3. நிதியாளர் மற்றும் கண்காணிப்பாளர்.
4. கிளை மேலாளர், கனராவங்கி, திருச்சி K.K. நகர் கிளை
5. உபரி - 2.

தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்சி-23.

# இணைப்பு – 1

## இணையவழி கட்டணம் செலுத்தும் முறை

**நவம்பர் 2022** பருவத்தேர்வுக்கு பணம் செலுத்தி இணையவழி பதிவு செய்யும் மாணவர்கள் கீழ்கண்ட நடைமுறையை பின்பற்றவும்.

Stage 1: தேர்வு நெறியாளர் அலுவலக Link-னை Click செய்ய வேண்டும். **www.evrcoe.com**

Stage 2: Student Login ஐ தேர்ந்தெடுக்க வேண்டும்.

Stage 3: User Name மற்றும் password-ஐ உள்ளீடு செய்து login செய்ய வேண்டும்.

User Name : **Register Number (மாணவரின் பதிவெண்)**
Password : **DOB (dd-mm-yyyy)**

Stage 4: நடப்பு பருவ தாட்கள், Internal improvement (கட்டாயமானது) நிலுவைத்தாட்கள் அனைத்துமே தானாக தேர்வுசெய்யப்பட்டு ☑ குறியீடு இடப்பட்டிருக்கும். ஏதாவது நிலுவைத்தாளுக்கு தேர்வு எழுத விரும்பவில்லையெனில் அத்தாளுக்கு முன்புள்ள குறியீட்டை ☑click செய்து deselect ☐ செய்யவேண்டும்.

Stage 5: Make Payment-ஐ Click செய்ய வேண்டும்.

Stage 6: Gateway-ல் கோரப்பட்டுள்ள விபரங்களைத் தவறின்றி பூர்த்தி செய்து Payment-ஐ முடிக்க வேண்டும். பணம் வெற்றிகரமாக செலுத்தியவுடன் ரசீதினை Print – செய்து எடுத்து அதன் நகலினை தங்களுடைய பொறுப்பாசிரியர்களுக்கு வழங்கி பதிவுப்பட்டியலில் ரசீது எண் (Order No: ) குறிப்பிட்டு கையொப்பமிட்டு பதிவு செய்யவேண்டும்.

தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)
திருச்சி-23.

# இணைப்பு – 2

26.09.2022 முதல் 08.10.2022 வரை இணையவழி கட்டணம் செலுத்த இயலாத மாணவர்களுடைய தேர்வுக்கட்டணத்தை நம் கல்லூரி தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் காலை 10-30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை, தத்தம் வகுப்பு பொறுப்பு ஆசிரியர்கள் மூலமாக மொத்தமாக சேர்த்து ரொக்கமாக நேரடியாக செலுத்தலாம்.

**09.10.2022 முதல் அபராதத்துடன் கட்டணம் செலுத்தும் மாணவர்கள் மற்றும் 15.10.2022 முதல் தட்கல் முறையில் கட்டணம் செலுத்தும் மாணவர்கள் இணையவழியாக மட்டுமே செலுத்த வேண்டும் என அறிவிக்கலாகின்றது. நேரடியாகவோ (அ) இணையவழியாகவோ கட்டணம் செலுத்தும் மாணவர்கள், ரசீது நகலினை அவர்கள் சார்ந்த துறையின் பொறுப்பாசிரியரிடம் சமர்ப்பித்து பதிவுப்பட்டியலில் தவறாது பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

**துறைத்தலைவர்கள் தங்களது மாணவர்களை இணையவழியாக கட்டணம் செலுத்தி தேர்வுக்குப் பதிவு செய்திட ஊக்கப்படுத்த வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாணவர்கள் நேரடியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்தில் பணம் செலுத்துவதை கூடியவரை தவிர்க்குமாறு அறிவுறுத்தக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

அபராதமின்றி தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டிய காலம்: **26.09.22 முதல் 08.10.22 வரை**
**(இணையவழியாக அல்லது நேரடியாக தேர்வு நெறியாளர் அலுவலகத்தில்)**

அபராதம் **ரூ.300/-** உடன் தேர்வுக் கட்டணம்
செலுத்த வேண்டிய காலம்: : **09.10.22 முதல் 14.10.22 வரை**
**(இணையவழியாக மட்டும்)**

தட்கல் முறையில் கட்டணம் ரூ.**600**/- உடன் தேர்வுக்கட்டணம்
செலுத்த வேண்டிய காலம் **(இணையவழியாக மட்டும்)**: **15.10.22 முதல் 19.10.22 வரை**

**ஒற்றைச் சாளர** முறையில் கட்டணம் ரூ.**1200**/- உடன் தேர்வுக்கட்டணம்
செலுத்த வேண்டிய காலம் (நேரடியாக மட்டும்): **20.10.2022 முதல் 29.10.2022 வரை**
**(நடப்பு பருவ மாணவர்களுக்கு மட்டும் )**

தேர்வு நெறியாளர். முதல்வர்.